## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.301/2020.

Prosecution witness for P.W.16.

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு.சண்முகராஜ்.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.01.2025.

A6 died. All accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது வடக்கு பரும்பூரில் குடியிருந்து புகைப்பட கடை நடத்தி வருகிறேன். சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு போலீசார் எங்கள் வீட்டிற்கு வந்து சில தாள்களில் என்னிடம் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். அதில் என்ன எழுதிக் கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. 2 மற்றும் 5 எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். அவை முறையே **அ.சா.ஆ 9 மற்றும் 10**. 5ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட அரிவாளுக்கான மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது **அ.சா.ஆ 11**.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 04.01.2020 அன்று போலீசார் குறுக்குச்சாலை ஐயங்கார் பேக்கரி அருகில் 5ம் எதிரியை கைது செய்து விசாரித்தபோது 5ம் எதிரி தானாக முன்வந்த கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் பதிவு

செய்தபோதும், அதனடிப்படையில் 5ம் எதிரி வடக்கு பரும்பூர் மேல்நிலைத் தொட்டி அருகில் உள்ள முட்புதரிலிருந்து எடுத்துக் கொடுத்த அரிவாளை போலீசார் மகஜரில் கைப்பற்றும்போது நானும் பாலமுருகன் என்பவரும் உடனிருந்து அந்த ஒப்புதல் வாக்குமூலத்திலும் கைப்பற்றுதல் மகஜரிலும் கையொப்பமிட்டதாக சொல்லியுள்ளேன் என்றும், 07.01,2020 அன்று 2ம் எதிரியை தெற்கு பரும்பூர் மேட்டுர் பேருந்து நிறுத்தம் அருகில் போலீசார் கைது செய்தபோது, 2ம் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் பதிவு செய்தபோதும், அதனடிப்படையில் 2ம் எதிரி சம்பவ இடத்தை காட்டும்போதும் நானும் மேற்படி பாலமுருகனும் உடனிருந்து அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பமிட்டதாக சொல்லியுள்ளேன் என்றும், தற்போது எதிரிகளுக்கு பயந்து கொண்டு பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

என்னுடன் சேர்ந்து கையொப்பமிட்டதாக சொல்லப்படும் பாலமுருகன் இறந்து விட்டார்.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2025.01.22 19:35:34 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.301/2020.

Prosecution witness for P.W.17.

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. ஆறுமுகசாமி** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.01.2025.

A6 died. All accused present.

முதல் விசாரணை

நான் தற்போது ஓட்டப்பிடாரத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். 2019 ம் ஆண்டு போலீசார் என்னை காவல் நிலையம் வரச் சொல்லி என்னிடம் சில தாள்களில் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். அதில் என்ன எழுதியிருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. 8 ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள கையொப்பமும், 8 ம் எதிரியிடமிருந்து அரிவாளை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகஜரிலும் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். அவை முறையே அ.சா.ஆ.12 மற்றும் அ.சா.ஆ.13 ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 08.01.2020 அன்று போலீசார் 8 ம் எதிரியை காவல் நிலையத்தில் காவலில் வைத்திருக்கும்போது நான் அங்கு சென்றபோது 8 ம் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார்

பதிவு செய்தபோதும், அதனடிப்படையில் 8ம் எதிரி வடக்கு பரும்பூர் வ.உ.சி. மணிமண்டபம் அருகில் உள்ள முட்செடியில் இருந்த அரிவாளை ஆஜர் செய்தபோதும் நானும் காசிராஜன் என்பவரும் உடனிருந்து அந்த ஒப்புதல் வாக்குமூலத்திலும் கைப்பற்றுதல் மகஜரிலும் கையொப்பமிட்டதாக சொல்லியுள்ளேன் என்றும், தற்போது எதிரிகளுக்கு பயந்து கொண்டு பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி காசிராஜன் இறந்து விட்டார்.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.01.22 19:35:43 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.